

சேலம் ஊராட்சி ஒன்றியம், செட்டிச்சாவடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.கே.அம்பிகா கார்த்திகேயன்.,

நடவடிக்கை எண்.01/2023–2024 நாள். 07.03.2024.

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மாவட்டம் / சேலம் வட்டம்– சேலம் ஊராட்சி ஒன்றியம் – செட்டிச்சாவடி ஊராட்சி ச.எண்.81/3A1 – இல் 1.53 ஏக்கர் (அல்லது) 6203 ச.மீ பரப்பில் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த கோரியது – மனைப்பிரிவிக்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது - ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.19799/2020 பே, நாள்.24.12.2020.
2. அரசாணை எண்138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
3. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
4. அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்31.01.2020.
5. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள். நாள்.23.09.2020.
6. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள். நாள்.09.12.2020.
7. அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017–வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.30.08.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/ஏல்ஏ1,நாள்.08.09.2017.
9. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர்,மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களது உத்தரவு ஆணை ந.க.எண். SLM/UPB81A7J/11493/2023/2023/TCP, நாள்.28.07.2023.
10. சேலம் ஊராட்சி ஒன்றியம், செட்டி.சாவடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆவண எண்.5744/2023, நாள்.25.07.2023.
11. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) வழங்கப்பட்ட ஆவண எண்.5743/2023, நாள். 25.07.2023.
12. செட்டிச்சாவடி, கிராம ஊராட்சியின் தீர்மானம் எண்.09, நாள்.27.02.2024.

உத்தரவு :

சேலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிச்சாவடி ஊராட்சி ச.எண்.81/3A1 – இல் 1.53 ஏக்கர் (அல்லது) 6203 ச.மீ பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் **SWP/DTCP/SALEM/LAYOUT NO.190/2023** மற்றும் **PLANNING PERMISSION NO.79/2023** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் பார்வை 9 ல் காணும் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 10 ன்படி, உத்தேச மனைப்பிரிவு சாலைகள், மூலைமுடுக்குகள் பரப்பு ஆகியவை 1146.63 ச.மீ மற்றும் பொது உபயோகம் பரப்பு 26.74 ச.மீ (0.53%) உள்ளாட்சிக்கு தான ஆவண எண்.5744/2023 நாள்.25.07.2023 மற்றும் பார்வை 11 ன்படி, TANGEDCO– க்கு பொது ஒதுக்கீடு உபயோக மனை 26.26 ச.மீ (0.52%) தானபத்திர எண்.5743/2023, நாள். 25.07.2023 ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 12 ன் படி இம்மனைப்பிரிவில் செய்யப்பட்டு உள்ள குடிநீர் வசதிகள், தெரு விளக்கு வசதிகள், சாக்கடை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்று செட்டிச்சாவடி ஊராட்சியால் மன்ற தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், செட்டிச்சாவடி ஊராட்சியில் கூராய்வு கட்டணம் ரூ.4500/–(ரூபாய் நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) 07.03.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, செட்டிச்சாவடி ஊராட்சி ச.எண்.81/3A1– இல் 1.53 ஏக்கர் (அல்லது) 6203 ச.மீ பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை 09 ல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு; வரைபடம்

தலைவர்
செயலாட்சி அலுவலர்
செட்டிச்சாவடி ஊராட்சி
சேலம்– 636 008.

பெறுதல் :

திருமதி.ஆர்.கவிதா,
த/பெ பி.ராஜேஷ்,
க.எண்.9, சிபி கார்டன்ஸ், மணக்காடு,
கிழக்குத் தெரு நெ.2/2,
சேலம் வட்டம்,
சேலம் மாவட்டம் – 636 007.

நகல்:

1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/ மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்.
2.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), சேலம்.
3.இணை சார் பதிவாளர், சேலம் மேற்கு.
4.வட்டாட்சியர், சேலம்.